# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,100 — 1935 ம் ஞூ தைமீ 18 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென் மாகாணம், மாத்தறை டிஸ்திறிக்ற், வெலிகம் கோறளேயிலுள்ள மிரிசா என்னும் இடத்தில் ஓர் பிரசித்த கிணறு கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 241. குறிச்சி —மிரிசா தெற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பொக்குனபொடவத்தை அல்லது மேஸ்திரி சட்டம்பிகே சீமான் படிஞ்சிவத்தை | தோட்டம் .. | (1) டோர்லீ வீரசூரியா, மிரிசா; (2) குனிஹென்னெடிகே ஜுவானிஸ் சில்வா, மிரிசா | 0 0 3·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஞூ (பெப்றுவரி) மாசி மாசம் 28 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1935 ம் ஞூ (ஜனுவரி) தைமீ 9 ந் உ.

சீ. ஜே. டீ. லந்றறீ,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் லந்தபொக்கே அணையை திருப்புவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

கடைசிக் கிராமப்படத்து இல. 2 க்குக் கூட்டப்பட்ட இல. 7 குறிச்சி—வதுளை டிஸ்திறிக் கும்பல்டெலகோறளை கொற்றுவெல.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| SA1 | உடஅருவெகேன | ஒரு அணை அடங்கிய வெறும் பூமி | வீரசிங்கி முடியான்செலாகே உக்குவண்டா, வீரசிங்கி முடியான்செலாகே புஞ்சி மெனிக்கா, வீரசிங்கி முடியான்செலாகே குமா, எல்லோரும் கொற்றுவெல | 0 0 16·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

7——J. N. 43502—128 (1/35)

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ௵ (ஏப்றில்) சித்திரை மாசம் 2 ந் தேதியிலன்று சாயந்தரம் 2 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1935 ம் ௵ (ஜனவரி) தைமீ 12 ந் ௳.

டபிள்யு. ஏ. டீ. சில்வா,
உதவி அரசாட்சி ஏசண்டு, ஊவா.

---

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு டிஸ்திறிக்குகளைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1935 ம் ஆண்டு மாசி மாதம் 11 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.— ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,

எஸ். துரையப்பா,
வடமாகாண பிஸ்காலுக்காக.

யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோர்,
1935 ம் ௵ தைமீ 9 ந் ௳.

## இலங்கை சேவிங் வங்கி வட்டி அறிவித்தல்.

இலங்கை சேவிங் வங்கின் மூன்றும் விதானப் பிரகாரம் 1935 ம் வருடத்தில் சேமிப்போர்களுக்கு 1,000 ரூபாவுக்கு மேற்படாத தொகைக்கு நூற்றுக்கு 3½ வீதமும், 1,000 ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு நூற்றுக்கு 3 வீதமும் வட்டி கொடுக்கப்படுமென்று இலங்கை சேவிங் வங்கின் காரியகர்த்தரால் இத்தால் அறிக்கையிடப்படுகிறது.

என்றி. ஏ. கேமற்,
சக்கிறுத்தார்

இலங்கை சேவிங் வங்கி,
கொழும்பு. 1935 ம் ௵ ஜனவரிமீ 3 ந் ௳.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO